Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions** **Case No. 356 of 2022**

Deposition of ....... witness for ................. Prosecution........**P.W.5**
Defence
Court

| | |
|---|---|
| Name | சின்னதுரை |
| Father's name | ரவிச்சந்திரன் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 30 |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 18th day of January 2024.**

(S.PRAKASH) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 18th day of January 2024.**

SIGNATURE OF THE JUDGE.

எதிரிகள் ஆஜர்.

**முதல்விசாரணை**

1. நான் பண்ருட்டி தாலுக்கா அழகப்பசமுத்திரம் கிராமத்தில் குடியிருந்து, சிலம்பிநாதன்பேட்டையில் உள்ள கோவிந்தராசு(இந்த கோவிந்தராசு என்பவர் இவ்வழக்கின் எதிரி

அல்ல) குவாரியில் சூப்பர்வைசராக பணிபுரிந்து வருகின்றேன். ஆஜர் எதிரிகள் இருவரையும் தெரியும். புதுப்பாளையம் கிராமத்தில் உள்ள பட்டாபி என்பவரின் டிபன் கடையில், காலை உணவும் மதிய உணவும் நான் சாப்பிடுவது வழக்கம். காலை உணவினை காலை சுமார் பத்து மணிக்கு சாப்பிடுவேன். நான் பணிபுரியும் குவாரிக்கும் புதுப்பாளையத்தில் உள்ள டிபன் கடைக்கும் சுமார் ஒன்றரை கிலோமீட்டர் தொலைவு இருக்கும். கடந்த 18.09.2021 அன்று காலை உணவு வாங்குவதற்காக புதுப்பாளையம் பட்டாபி டிபன் கடைக்கு, காலை ஒன்பதரை மணி அளவில் சென்றேன். அப்போது என்னுடன் கடையில் சாப்பிடுபவர்கள் உடன் இருந்தார்கள். ஓட்டலில் இருந்து பார்த்தால் முதல் எதிரி நதியாவின் வீடு தெரியும். அங்கு ஒரே சத்தமாகவும், சண்டையாகவும் இருந்தது. சத்தம் கேட்டதால் அருகே சென்றேன். புதுப்பாளையத்தை சேர்ந்த ஏழெட்டு நபர்கள் அங்கு இருந்தார்கள். ஊர்க்காரர்கள் நதியாவின் வீட்டின் கதவை தட்டி என்னவென்று விசாரித்தபோது, முதல் எதிரி நதியா கதவை திறந்து, தனக்கும் தன் வீட்டுக்காரருக்கும் சண்டை என்றும், வேறொன்றுமில்லை என்று கூறினார். ஊர்க்காரர்கள் வழக்கமாக குடும்பத்தில் நடக்கும் கணவன் மனைவி சண்டை என்று கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டார்கள். முதல் எதிரி நதியாவை நான் அப்போது தான் பார்த்தேன். அவர் எனக்கு பழக்கமில்லை. அதன்பிறகு நான் கடைக்கு சென்று டிபன் கட்டிக்கொண்டு குவாரிக்கு சென்றுவிட்டேன். டிபன் பத்தாததால், மீண்டும் டிபன் கடைக்கு அன்று காலை சுமார் பதினோரு மணிக்கு டிபன் வாங்க மீண்டும் வந்தேன். நான் வந்தபோது ஐந்தாறு நபர்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்ததால் சிறிது நேரம் பிடிக்கும் என்றும், என்னை காத்திருக்குமாறும் கூறினார்கள். நான் போன் பேசிக்கொண்டு வெளியில் நின்றுக்கொண்டிருந்தேன். அப்போது 2 வது எதிரி கோவிந்தராசு, நான் நின்றிருந்த ஓட்டலை தாண்டி வண்டியில் சென்று, முதல்எதிரி நதியாவின் வீட்டின் பின்வாசல் பக்கமாக பைக்கை நிறுத்தினார். வண்டியை நிறுத்திவிட்டு முதல் எதிரி நதியாவின் வீட்டிற்குள் இரண்டாம் எதிரி கோவிந்தராசு சென்றார். சுமார் பத்து நிமிடத்திற்கெல்லாம் அய்யோ அம்மா என்று கத்தும் சத்தம் கேட்டது. திரும்பவும் சென்று ஊர்க்காரர்கள் இரண்டு மூன்று பேர் நதியாவின் வீட்டு கதவினை தட்டி, என்னவென்று கேட்டார்கள். முதல் எதிரி நதியா கதவை திறந்து வெளியே வந்தார். புருஷன்

பொண்டாட்டிக்குள் சண்டை என்றும், வேறொன்றுமில்லை என்றும் சொல்லிவிட்டு, கதவை மூடிக்கொண்டு உள்ளே சென்றுவிட்டார். அதன்பிறகு அரைமணி நேரம் கழித்து 2ம் எதிரி கோவிந்தராசு வெளியே வந்தார். 2ம் எதிரி கோவிந்தராசு நதியாவின் வீட்டிற்குள் செல்லும்போது, வெள்ளை வேட்டி, வெள்ளை சட்டையில் சென்றார். ஆனால் வெளியில் வரும்போது அழுக்கான வேட்டியுடன் கட்டம் போட்ட சட்டை போட்டுக்கொண்டும், தலையில் துண்டை கொண்டு தலைப்பாகை கட்டிக்கொண்டு, வெளியே வந்தார். பைக்கை ஸ்டார்ட் செய்து எடுத்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டுவிட்டார். மறுநாள் காலை நான் டிபன் வாங்க டிபன் கடைக்கு சென்றபோது நதியாவின் கணவர் ஜெகதீசன் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். சம்பவம் நடந்து நான்கு நாட்கள் கழித்து, போலிசார்என் வீட்டிற்கு வந்து என்னை நடந்த விவரங்களை கேட்டு விசாரித்தார்கள்.

<u>முதல் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

2. குவாரி உள்ள இடத்திற்கும் புதுப்பாளையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்குமென்றால் சுமார் ஒன்றரை கிலோமீட்டர் தூரம் இருக்கும். சிலம்பிநாதன்பேட்டையிலேயே ஓட்டல்கள் உள்ளன என்றால், ஒரு ஓட்டல் உள்ளது. ஆனால் சாப்பாடு அவ்வளவுநன்றாக இருக்காது. நாங்கள் வழக்கமாக அக்கவுண்ட் வைத்து, டிபன் வாங்குவதால், புதுப்பாளையத்தில் உள்ள கடையில் தான் டிபன் வாங்குவோம். சிலம்பிநாதன்பேட்டையில் உணவும் நன்றாக இருக்குமென்றும், நான் இவ்வழக்கிற்காக அங்கு உணவு நன்றாக இருக்காது என்றும், புதுப்பாளையத்தில் உள்ள ஓட்டலுக்கு வந்து, டிபன் வாங்குவதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சத்தம் கேட்டு நதியா வீட்டிற்கு சென்று பார்த்ததாகவும், அங்கு நதியா கதவை திறந்து, எங்களிடம் பேசியதாக நான் கூறுவது பொய்யான சாட்சியம் என்றும், நான் அங்கிருந்து நதியாவின் வீட்டை பார்க்கவும் இல்லை, அங்கு செல்லவும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் தெரிவித்துள்ளதுபோன்று, முதல் எதிரி நதியாவின் வீட்டிற்கு பக்கத்தில் நான் குறிப்பிடும் ஓட்டல் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புகார்தாரர் முருகன் எனக்கு தெரிந்தவர் என்றும், அவர் மகன் வாசுதேவன்

என்னுடன் குவாரியில் லாரி ஓட்டுபவர் என்றும், அந்த அடிப்படையில் அவர் கேட்டுக்கொண்டதால், போலிஸ்க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

2 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

3. எனது சொந்த ஊர் அழகப்பசமுத்திரம், நான் அங்கு தான் குடியிருக்கிறேன். அழகப்பசமுத்திரத்திலிருந்து காடாம்புலியூர் சுமார் 3 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான். காடாம்புலியூர் அந்த பகுதியில் ஒரு பெரிய ஊர் என்றால் சரிதான். பண்ருட்டியிலிருந்து கும்பகோணம் செல்லும் சாலை, காடாம்புலியூர் வழியாகத்தான் செல்கிறது என்றால் சரிதான். காடாம்புலியூரில் அதிகளவில் ஓட்டல்கள் உள்ளன என்றால் ஆமாம். அழகப்பசமுத்திரத்திலிருந்து புதுப்பாளையம் ஆறு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான். நான் பணிபுரியும் குவாரி அழகப்பசமுத்திரத்தில் தான் இருக்கிறது என்றால் சரியல்ல, சிலம்பிநாதன்பேட்டையில் இருக்கிறது. போலிசார் என்னை விசாரித்தபோது சிலம்பிநாதன்பேட்டையில் உள்ள குவாரியில் வேலை செய்வதாக நான் வாக்குமூலம் வழங்கவில்லை என்றால் சரியல்ல, அந்த விவரத்தை போலிஸ் விசாரணையில் கூறியுள்ளேன்.

4. போலிசார் பதிவு செய்துள்ள வாக்குமூலத்தில் " அழகப்பசமுத்திரத்தில் கிழக்கு தெருவில் குடியிருந்து வருகின்றேன். நான் செம்மண் குவாரியில் சூப்பர்வைசராக வேலை பார்த்து வருகின்றேன்" என குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஆமாம். குவாரியின் ஊரை பற்றியும் தெரிவித்தேன். போலிசார் எழுதினார்களா என்று எனக்கு தெரியாது. புதுப்பாளையத்தில் எத்தனை ஓட்டல்கள் உள்ளன என்றால் இரண்டு ஓட்டல்கள் உள்ளன. முதல் எதிரி நதியா வீட்டிற்கு வெளியே உள்ள ரோடு, எந்த திசையில் செல்லுகின்ற ரோடு என்றால், கிழக்கு மேற்காக செல்லும் ரோடு. நதியாவின் வீட்டின் தலைவாசல் எந்த திசையை நோக்கி உள்ளது என்றால் மேற்கு திசையை பார்த்தவாறு உள்ளது. பின்வாசல் கிழக்கு திசையில் உள்ளதா என்றால் ஆமாம். நான் எந்த ஓட்டலுக்கு போனேன் என்றால் பட்டாபி ஓட்டலுக்கு போனேன். பட்டாபி ஓட்டல் என போர்டு உள்ளதா என்றால் போர்டு இல்லை, அது வீட்டுமுறை சமையல் ஓட்டல். அந்த வீடு குடிசை

வீடு என்றால் ஆமாம். பட்டாபி ஓட்டல் உள்ள தெரு எந்த திசையில் உள்ளது என்றால் கிழக்கு மேற்கு திசையில் உள்ளது. நதியா வீட்டிலிருந்து 100 மீட்டர் தள்ளி இடதுபுறமாக ஒரு சாலை திரும்புகிறது என்றும், அந்த சாலையில் தான் ஓட்டல் உள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. அதனை நான் பார்க்கவில்லை. நான் டிபன் வாங்கியதாக சொல்லும் ஓட்டல் குடிசைக்கும், நதியா வீட்டிற்கும் இடையே நான்கைந்து வீடுகள் உள்ளன என்றால் சரியல்ல. ஓட்டல் குடிசைக்கும் நதியா வீட்டிற்கும் இடையே கிருஷ்ணமூர்த்தி பால்கம்பெனி, அவரது மொட்டை மாடி வீடு, அவரது மாட்டுகொட்டகை, அவரது பாத்ரூம், மற்றொரு மாட்டுக்கொட்டகை ஆகியவை இடையில் உள்ளது என்றால் சரிதான். அவை நீட்டுவாக்கில் உள்ளது. பட்டாபி ஓட்டலின் வாசற்படி எந்த திசையில் உள்ளது என்றால் தெற்கு திசையில் உள்ளது. முதல் எதிரி நதியா வீட்டிற்கும், பட்டாபி ஓட்டலுக்கும் இடையே சுமார் 100 மீட்டர் தொலைவு இருக்கும் என்றால் இல்லை, சுமார் 20 மீட்டர் தொலைவு தான் இருக்கும்.

5. நான் பணிபுரியும் குவாரியில் ஆறு நபர்கள் வேலை செய்கிறோம். ஆறு நபர்களுக்கும் நான் தான் டிபன் வாங்கி செல்வேனா என்றால் ஆமாம். எவ்வளவு நாட்களாக நான் அந்த ஓட்டலில் டிபன் வாங்கி வருகிறேன் என்றால் சுமார் இரண்டு வருடங்களாக டிபன் வாங்கி செல்கிறேன். வழக்கமாக இரண்டு வருடமாக டிபன் வாங்கி சென்றால், தோராயமாக எவ்வளவு சாப்பிடுவார்கள் என்று நிச்சயம் தெரிந்திருக்கும் என்றும், நான் இந்த விவரம் தொடர்பாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சாட்சி தானாக, அன்றைய தினம் லாரி டிரைவர்கள் வந்ததால் டிபன் கூடுதலாக தேவைப்பட்டது. லாரிக்காரர்கள் வந்ததால் டிபன் கூடுதலாக தேவைப்பட்டது என்றும், அதனால் தான் மீண்டும் டிபன் வாங்க வந்ததாக நான் போலிஸ் விசாரணையில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல, தெரிவித்தேன். போலிஸ்காரர்கள் விசாரித்தபோது, என்னோடு இருந்ததாக கூறும் ஏழெட்டு நபர்களின் பெயர்களை கூறினேனா என்றால், கிருஷ்ணமூர்த்தியின் பெயர் மட்டுமே தெரியும், மற்றவர்களின் பெயர்கள் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தபோது "நான் வந்தபோது ஐந்தாறு நபர்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்ததால் சிறிது நேரம் பிடிக்கும் என்றும், என்னை காத்திருக்குமாறும்

கூறினார்கள். நான் போன் பேசிக்கொண்டு வெளியில் நின்றுக்கொண்டிருந்தேன்" என கூறியுள்ளேனா என்றால், கூறினேன். போலிசார் என்னை விசாரித்தபோது " நான் நின்றிருந்த ஓட்டலை தாண்டி வண்டியில் சென்று, முதல்எதிரி நதியாவின் வீட்டின் பின்வாசல் பக்கமாக பைக்கை நிறுத்தினார். வண்டியை நிறுத்திவிட்டு முதல் எதிரி நதியாவின் வீட்டிற்குள் இரண்டாம் எதிரி கோவிந்தராசு சென்றார் " என வாக்குமூலம் வழங்கினேனா என்றால், ஆமாம் அந்த விவரத்தை போலிசாரிடம் தெரிவித்தேன். பட்டாபி ஓட்டலில் இருந்து பார்த்தால் நதியாவின் வீடு தெரியாது என்று சொன்னால் சரியல்ல, தெரியும். கிழக்கு பக்கமாக பின்வாசல் உள்ளதாக நான் கூறும் நிலையில், பட்டாபி ஓட்டலில் இருந்து நதியாவின் வீட்டு பின்வாசலை நிச்சயம் பார்க்க முடியாது என்றும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. முதல் எதிரி நதியாவின் வீடு எங்குள்ளது என்று எனக்கு தெரியாது என்றும், அவரது வீட்டின் தலைவாசல் எந்த திசையில் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றும், நான் அங்கு செல்லவில்லை என்றும், முதல் எதிரியின் வீட்டை பற்றி எதுவும் தெரியாமல், நான் போலிசார் சொல்லிக்கொடுத்ததின் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அழகப்பசமுத்திரத்திலிருந்து அருகிலுள்ள காடாம்புலியூரில் டிபன் வாங்காமல் ஆறு கிலோமீட்டர் தள்ளி உள்ள புதுப்பாளையத்தில் டிபன் வாங்கியதாக நான் கூறுவது நம்பத்தகுந்த வகையில் இல்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எங்கள் குவாரியிலிருந்து ஒன்றரை கிலோமீட்டர் தொலைவில் தான் பட்டாபி ஓட்டல் உள்ளது. பட்டாபி ஓட்டலின் உரிமையாளர் பெயர் தெரியுமா என்றால் தெரியும், பட்டாபிராமன். பட்டாபி ஓட்டலில் இரண்டு மூன்று நபர்களுக்கு மேல் உட்கார்ந்து சாப்பிடும் அளவிற்கு இடம் இல்லை என்றும், அங்கு சேர், டேபிள் எதுவும் இல்லை என்றும், சொன்னால் சரியல்ல, அங்கு மண் சுவர் கட்டி வைத்துள்ளார்கள், அதில் உட்கார்ந்து சாப்பிடலாம், இரண்டு மூன்று நபர்களுக்கு மேல் உட்கார்ந்து சாப்பிடலாம். நான் உட்கார்ந்து சாப்பிட செல்லவில்லை, நான் டிபன் கட்டிக்கொண்டு வர சென்றேன். அந்த ஓட்டலில் காலை ஒன்பது அல்லது பத்து மணிக்கு மேல்ம, டிபனே இருக்காது என்றும், மதியம் சாப்பாடும் அங்கு கிடைக்காது என்றும், மாறாக நான் பதினோரு மணிக்கு டிபன்

வாங்க சென்றதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசா 1 முருகன் எனது உறவினர் என்றும், அவர் சொல்லிக்கொடுத்ததின் பேரில் போலிஸ்க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-S.Prakash*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 356 of 2022**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.6**
Defence
Court

| | |
|---|---|
| Name | பழனிசாமி |
| Father's name | பெருமாள் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | கிராம நிர்வாக அலுவலர் |
| Religion | |
| Age | 55 |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 18th day of January 2024.**

(S.PRAKASH) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 18th day of January 2024.**

SIGNATURE OF THE JUDGE.

எதிரிகள் ஆஜர்.

**முதல்விசாரணை**

1. நான் வருவாய்துறையில், மாளிகைமேடு கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 2021 ஆம் வருடம் சிலம்பிநாதன்பேட்டை கிராம நிர்வாக அலுவலராக

பணிபுரிந்து வந்தேன். அச்சமயம் கீழ்மாம்பட்டு கிராமத்தை கூடுதல் பொறுப்பாக பார்த்து வந்தேன். கடந்த 19.09.2021 ஆம் தேதியன்று, மாலை 4.00 மணிக்கு கீழ்மாம்பட்டு கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் நானும், எங்கள் கிராம உதவியாளர் தேவி என்பவரும், பணியில் இருந்தோம். அப்போது டிஎஸ்பி சார் எனக்கு போன் செய்தார். இரண்டு நபர்களை கைது செய்து விசாரிக்கஇருப்பதாகவும், அந்த நடவடிக்கைக்கு சாட்சியாக இருக்குமாறும் எங்களை அழைத்தார்கள். நானும் கிராம உதவியாளர் தேவியும் புறப்பட்டு கீழ்மாம்பட்டு பஸ் ஸ்டாப்பிற்கு சென்றோம். அங்கு ஆஜர் எதிரிகள் நதியா மற்றும் கோவிந்தராசு இருவரும் இருந்தார்கள். அவர்களுடன் போலிசாரும் இருந்தார்கள். அவர்களை விசாரித்தபோது, முதல்எதிரி நதியா தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை அளித்தார். அதனை போலிசார் லேப்டாப்பில் டைப் செய்துகொண்டார்கள். பென்டிரைவ் - ல் அதனை எடுத்து சென்று பிரிண்ட் அவுட் எடுத்து வந்தார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது. இரண்டாவது சாட்சி கையெழுத்து கிராம உதவியாளர் தேவியின் கையெழுத்து ஆகும். முதல் எதிரி நதியாவும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தார். போலிசாரிடம் தான் செய்த குற்றத்தை பற்றி கூறி, பொருட்களை எரித்த இடத்தை காண்பிப்பதாக தெரிவித்தார். **முதல் எதிரி நதியாவின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி " ரத்தக்கறை படிந்த ஆடைகளை ............. வீட்டு தோட்டத்தில் எரித்த இடத்தையும், ....................................கயிறு, மண்வெட்டி, கோடாலி ஆகியவற்றை என் வீட்டின் அறையினுள் மறைத்து வைத்துள்ளதையும் எடுத்து ஆஜர் செய்கிறேன்" முறையே அதசாஆ 2 ஆகு**ம்.

2. அதன்பிறகு நதியா கூறியதன் அடிப்படையில் நதியாவும் போலிசாரும் நதியாவின் வீட்டிற்கு சென்றார்கள். நாங்களும் அவர்களுடன் முதல் எதிரி நதியா வீட்டிற்கு சென்றோம். அங்கு பாதி எரிந்த நிலையில் உள்ள அரைக்கை சட்டை ஒன்றை முதல் எதிரி ஆஜர்செய்தார். எரிந்தும் எரியாமலும் இருந்த நான்கு முழ வேட்டி ஒன்றினை முதல் எதிரி எடுத்து ஆஜர் செய்தார். எரிந்த நிலையில் இருந்த ஒரு நீண்ட பாவாடை ஒன்றினை முதல் எதிரி ஆஜர் செய்தார். மேற்படி பொருட்களையும், எரிந்த நிலையில் இருந்த சாம்பலையும் போலிசார் கைப்பற்றினார்கள். **அவை**

**முறையே சா பொ 1 முதல் சா பொ 4 ஆகும். முதல் எதிரி நதியாவின் வீட்டிற்குள் உள்ள அறையிலிருந்து நைலான் கயிறு ஒன்றினை முதல் எதிரி எடுத்து ஆஜர் செய்தார். அதனை போலிசார் கைப்பற்றிக்கொண்டார்கள். அந்த நைலான் கயிறு சா பொ 5 ஆகும்**. பின்னர் மகசர் தயார் செய்து எங்களிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். கைப்பற்றுதல்கள் தொடர்பாக தயார் செய்யப்பட்ட மகசர்களில் உள்ள முதல் சாட்சிகையொப்பம் என்னுடையது ஆகும். இரண்டாவது சாட்சி கையொப்பம் கிராம உதவியாளர் தேவியின் கையொப்பம் ஆகும். **துணி மற்றும் சாம்பல் தொடர்பான கைப்பற்றுதல் மகசர் அதசாஆ 3 ஆகும்**. **நைலான் கயிறு தொடர்பான கைப்பற்றுதல் மகசர் அதசாஆ 4 ஆகும்**. இந்த விவரங்கள் தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>முதல் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

3. நான் கீழ்மாம்பட்டு கிராமத்தில் எவ்வளவு ஆண்டுகள் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன் என்றால், நான் கீழ்மாம்பட்டு கிராமத்தில் கூடுதல் பொறுப்பாக தான் பணியாற்றினேன். இரண்டு நாட்கள் கூடுதல் பொறுப்பு வகித்தேன். இரண்டு நாட்கள் தேதி தெரியுமா என்றால், 18.09.2021 மற்றும் 19.09.2021 ஆகிய இரண்டு நாட்கள் கூடுதல் பொறுப்பு வகித்தேன். சிலம்பிநாதன்பேட்டை கிராமத்திற்கும் கீழ்மாம்பட்டு கிராமத்திற்கும் இடையே எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சுமார் ஒன்றரை கிலோமீட்டர் தொலைவு இருக்கும். காடாம்புலியூர் காவல்நிலையத்திலிருந்து எஸ் ஐ எனக்கு போன் செய்தாரா என்றால் இல்லை, டிஎஸ்பி எனக்கு போன் செய்தார். எந்த நம்பரிலிருந்து டிஎஸ்பி எனக்கு போன் செய்தார் என்று தற்போது கூற முடியுமா என்றால் நெம்பர் தற்போது நினைவில்லை, நான்கு வருடங்களாகிவிட்டது. காடாம்புலியூர் காவல்நிலையத்திலிருந்து எஸ் ஐ தான் எனக்கு போன் செய்தார் என்றும், டிஎஸ்பி போன் செய்ததாக நான் வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கீழ்மாம்பட்டு கிராமத்தில் எத்தனை பஸ் ஸ்டாப்புகள் உள்ளன என்றால் இரண்டு பஸ் ஸ்டாப்புகள் உள்ளன. நான் முதல் விசாரணையில், இரண்டு பஸ் ஸ்டாப்புகளில் எந்த பஸ் ஸ்டாப்பில் எதிரிகள் உட்கார வைக்கப்பட்டிருந்தனர் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். சாட்சி

தானாக கீழ்மாம்பட்டில் எஸ். புதுப்பாளையம் பஸ் ஸ்டாப்பில் எதிரிகள் இருந்தார்கள். எஸ். புதுப்பாளையம் கிராமம், கீழ்மாம்பட்டு ஆள்வரையில் தான் உள்ளது. இரண்டு கிராமங்களுக்கும் இடையே ஒன்றரை கிலோமீட்டர் தொலைவு உள்ளது என்றால் சரிதான். எஸ் புதுப்பாளையம் பஸ் ஸ்டாப்பில் தான் நான் எதிரிகளை பார்த்தேனா என்றால் ஆமாம்.

4. வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக சொல்லப்படும் லேப் டாப் எந்த நிறுவனத்தின் லேப் டாப் என கூறமுடியுமா என்றால் அதுபற்றி எனக்கு நினைவில்லை. காவல்நிலையத்தில் வைத்து தான் ஒப்புதல் வாக்குமூலம் பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றும், அதனால் தான் லேப்டாப்பின் மாடல் பற்றி எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. காவல்துறையினர் அரசு ஊழியர் என்பதாலும், நானும் ஒரு அரசுஊழியர் என்ற அடிப்படையில் போலிசாரை அனுசரித்து தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் எதிரி என் முன்னிலையில், தாமாக முன்வந்து எவ்வித ஒப்புதல் வாக்குமூலத்தையும் வழங்கவில்லையென்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலம் என் முன்னிலையில் பதிவு செய்யப்படவில்லையென்றும், சொன்னால் சரியல்ல. வழக்கிற்கு தக்கவாறு பின்னிட்டு காடாம்புலியூர் காவல்நிலைத்தில் ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது என்றும், அந்த ஆவணத்தில் நானும், எனது கிராம உதவியாளரும் கையொப்பம் செய்து விட்டு, தற்போது தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சா பொ 1 முதல் 5 வரையிலான பொருட்களை முதல் எதிரி ஆஜர் செய்யவில்லை என்றும், அவைகள் முதல் எதிரியின் வீட்டிலிருந்து கைப்பற்றப்படவில்லையென்றும், அந்த வழக்கு சொத்துக்கள் வழக்கிற்காக போலிசாரால் பின்னிட்டு தயார் செய்யப்பட்டவை என்றும், அந்த மகசர்கள் பின்னிட்டு காவல்நிலையத்தில் தயார் செய்யப்பட்டவை என்றும், காவல்நிலையத்தில் வைத்து போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்துகொடுத்துவிட்டு தற்போது தவறான தகவல்களை கூறி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

5. டிஎஸ்பி எனக்கு போன் செய்து, எதிரிகளை கைது செய்து வைத்திருப்பதாகவும் அதனால் எங்களை வருமாறும் கேட்டுக்கொண்டார் என்றால் ஆமாம். எதிரிகள் எத்தனை நாட்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டார்கள் என எனக்கு தெரியுமா என்றால், அன்று நான்கு மணிக்கு தான் கைது செய்தார்கள். போலிசாரிடம் நான் அளித்த வாக்குமூலத்தில் " காடாம்புலியூர் காவல்நிலைய பயிற்சி DSP அவர்கள் ஒரு கொலை வழக்கில் இரண்டு எதிரிகளை கைது செய்து வைத்திருப்பதாகவும், விசாரிக்கவேண்டும் என்று சொல்லி அழைத்ததன் பேரில்" என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் நான்கு மணிக்கு கைது செய்யப்பட்டார்களா என்றால், எனக்கு நான்கு மணிக்கு டிஎஸ்பி தகவல் சொன்னார். எதிரிகள் இருவரையும் 18.09.2021 அன்றே போலிசார் கைது செய்துவிட்டார்கள் என்றும், அவர்களை சட்டவிரோதமாக அடைத்து வைத்து துன்புறுத்தி ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை தயார் செய்து, அதில் என்னிடம் கையெழுத்து பெற்றுவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக சொல்லும் பஸ் ஸ்டாபிற்கு அருகில், அதிகளவில் வீடுகளும் கடைகளும் உள்ளன என்றால், வீடுகள் உள்ளன, இரண்டு கடைகள் மட்டுமே உள்ளன. அந்த இடத்தில் வீடுகளும், கடைகளும் உள்ள நிலையில், தனி நபர்களை சாட்சிகளாக விசாரிக்காமல் போலிசாருக்கு ஒத்துரைத்து சாட்சியம் அளிக்கக்கூடிய நபர் என்ற வகையில், அரசு ஊழியரான என்னை இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல, மறுக்கிறேன்.

மறுவிசாரணை இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-S.Prakash*
*I Additional District Judge*
*Cuddalore.*